| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 10.04.2026 | |
| STC No. 989 /2025 | |
| சாட்சி :PW1 | |
| பெயர் : திரு. வெங்கடேசன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுக்கா : | வயது : /2026 |
| ( எதிரி ஆஜர் , எதிரி வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன வேலை செய்கிறேன் என்றால் இதற்கு முன்பாக ஆர்மியில் இருந்தேன், தற்போது மளிகை கடை மற்றும் ஹோட்டல் கடை செய்து வருகிறேன். ஆர்மியில் 2003 – 2021 ம் ஆண்டு வரை இருந்தேன். 2003 – 2021 ம் ஆண்டு வரை காலத்தில் எனக்கும், எதிரிக்கும் பணப்பரிமாற்றம் ஏதெனும் நடைபெற்றதா என்றால் இல்லை, அதன்பின்பு நடைபெற்றது. என்னுடன் பிறந்தவர்கள் அண்ணன் கருணாகரன், அக்கா தமிழ்ச்செல்வி. எதிரி என்ன வேலை பார்க்கிறார் என்றால் கல்வித்துறையில் வேலை பார்க்கிறார். எனக்கு அறிமுகமாகும் போது வேடச்சந்தூரில் வேலை பார்த்தார். தற்போது எங்கு வேலை பார்க்கிறார் என்றால் ஓய்வு பெற்றுவிட்டார்.

2. எதிரியுடன் வேறு யாராவதுவேலை பார்க்கிறார்களா என்றால் தெரியாது. எனது அண்ணன் கருணாகரன் என்ன வேலை செய்கிறார் என்றால் கல்வித்துறையில் வேலை பார்க்கிறார். எந்த வருடம் முதல் வேலை பார்த்து வந்தார் என்றால் அது பற்றி சரியாக தெரியவில்லை. எதிரியும், எனது அண்ணனும் கருணாகரன் வேடச்சந்தூரில் வேலை பார்த்துவந்தார்கள். தற்போது கருணாகரன் என்பவர் திண்டுக்கல் மாவட்டம் கல்வித்துறையில் இளநிலை உதவியாளராக வேலை பார்த்து வருகிறார் என்றால் ஆமாம். எதிரி எப்படி பழக்கம் என்றால் எனது அண்ணன் மூலம் பழக்கம். எந்த தேதியில் பழக்கம் செய்து வைத்ததார் என்றால் ஞாபகமில்லை.

3. எதிரியின் விலாசம் திண்டுக்கல், இரயில்வே ஸ்டேசன் ரோட்டில் உள்ளார். எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளோ என்றால் சென்றுள்ளேன். எதிரியின் என்ன வகையான வீடு என்றால் ஓட்டு வீடு. எதிரியின் வீட்டிற்கு செல்லும் போது யார் யார் செல்வோம் என்றால் நானும், எனது அண்ணன் கருணாகரன் செல்வோம். வேறு யாராவது சென்றார்களா என்றால் இல்லை. எந்த தேதியில் எத்தனை மணிக்கு சென்றோமா என்றால் ஞாபகமில்லை. எதிரியின் வீட்டிற்கு செல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 08.01.2023 அன்று கொடுத்தேன். எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ. 7 லட்சம் கொடுத்தேன். எப்படி பணம்கொடுத்தேன் என்றால் கேசாக கொடுத்தேன். எந்த வங்கியிலிருந்து பணம் எடுத்து கொடுத்தேன் என்றால் SBI வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேன். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் எனறால் ஞாபகமில்லை. வங்கி கணக்கு கடைசி எண்.64. எனக்கு SBI Bank, IOB Bank, DTTC Bank, ல் வங்கி கணக்குகள் உள்ளது. வேறு வங்கியில் கணக்கு ஏதும் இல்லை.

4. எதிரிக்கு பணம் கொடுத்த தேதியில் SBI வங்கி வரவு, செலவுகளை எடுத்து பார்த்தால் எதிரிக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் சொல்வதுபோன்று SBI வங்கி கணக்கிலிருந்து ரூ. 7 லட்சத்தை எடுத்து கொடுத்தது வரவு செலவு கணக்கு பார்வையிட்டு பணம் எடுக்கவில்லை என்று நிரூபிக்கப்பட்டால் எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்யலாமா என்றால் மளிகை கடை, ஹோட்டல் கடை அதிலிருந்து வரும் வருவாயில் பாதி கொடுத்துள்ளேன். 08.01.2023 அன்று எனது வங்கி கணக்கிலிருந்து எதிரிக்கு பணம் எடுத்து கொடுத்தாக சொல்வது சரியா, தவறா என்றால் அது தவறு. எதிரிக்கு பணம் கொடுத்த தேதியில் வேறு ஏதாவது ஆவணம் கொடுத்தாரா என்றால் புரோநோட் எழுதிகொடுத்தார். நான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் எதிரி என்ன ஆவணம்கொடுத்துள்ளார் என்பது பற்றி எனக்கு தெரிந்திருக்கும் என்றும் எதிரிக்கு நான் பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் ஆவணம் பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எதிரியானவர் கருணாகரன் என்பவரிடம் வீட்டு பத்திரம் கொடுத்துள்ள விபரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

5. எதிரி எந்த தேதியில் புரோநோட் கொடுத்தார் என்றால் 08.01.2023 அன்று கொடுத்தார். எத்தனை புரோநோட் என்றால் ஒரு புரோநோட் கொடுத்தார். புரோநோட்டை யார் வாங்கி வந்தது என்றால் எதிரி தான் கொடுத்தார். புரோநோட்டை யார் பூர்த்தி செய்தது என்றால் எதிரியுடன் வந்த ராமகிருஷ்ணன் பூர்த்தி செய்தார். புரோநோட்டை பூர்த்தி செய்ய சொல்லி விஷயங்களை யார் சொன்னது என்றால் எதிரி தான் சொன்னார். எவ்வளவு தொகைக்கு பூர்த்தி செய்யப்பட்டது என்றால் ரூ. 7 லட்சத்திற்கு செய்யப்பட்டது. எவ்வளவு வட்டிக்கு

பூர்த்தி செய்யப்பட்டது என்றால் ஒரு வட்டிக்கு. ரூ. 100/– க்கு ஒரு ரூபாய் வட்டி. புரோநோட்டில் ஒரு சதவீதம் போட்டுள்ளது ஆண்டு வட்டியா அல்லது மாத வட்டியா என்றால் மாதவட்டி. புரோநோட்டை எங்கு வைத்து பூர்த்தி செய்தார்கள் என்றால் எனது வீட்டில் வைத்து பூர்த்தி செய்தார்கள். எனதுவீட்டில் கேமரா பதிவுகள் உள்ளதா என்றால் இல்லை. எனது வீட்டிலிருந்து பஸ்ஸடாண்டிற்கு எவ்வளவு தூரம் என்றால் 200 மீ தூரம் இருக்கும். 200 மீ வழியில் யார் வீட்டிலாவது கேமரா பொருத்தப்பட்டுள்ள விபரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. புரோநோட்டை பூர்த்தி செய்யும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் எதிரி, எதிரியுடன் வந்த ராமகிருஷ்ணன், கருணாகரன் இருந்தார். மேற்படி புரோநோட்டு எனது வீட்டில் வைத்து பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் யார் யார் கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரிதான்.

6. பிச்சை என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. மீண்டும் சாட்சி கோபாலகிருஷ்ணன் அப்பா என்று சாட்சியம் அளிக்கிறார். பிச்சை எந்த ஊர் என்றால் சின்னவளையப்பட்டி. பிச்சை எனக்கு என்ன உறவு முறை என்றால் பழக்கம். கோபாலகிருஷ்ணன் எனக்கு என்ன உறவு முறை என்றால் நண்பர். கோபாலகிருஷ்ணன் எவ்வளவு காலம் நண்பர் என்றால் 4 ஆண்டுகள். கோபாலகிருஷ்ணன் என்ன படித்துள்ளார் என்றால் B.sc படித்துள்ளார். புரோநோட்டை பூர்த்தி செய்த இராமகிருஷ்ணன் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் தங்கமாப்பட்டி. இராமகிருஷ்ணன் கல்லுப்பட்டி என்று சொல்லியிருப்பது சரியா, தவறா என்றால் சரிதான். திண்டுக்கல் மாவட்டத்திற்கும், திருச்சி மாவட்டத்திற்கும் பார்டரில் வரும். நான் எந்த ஊர் என்றால் புதுவாடி புதுார். நானும், புரோநோட்டை எழுதிய இராமகிருஷ்ணன் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரியல்ல. புரோநோட்டில் சாட்சி கையொப்பம் எந்த தேதியில் செய்தார்கள் என்றால் அன்றைய தேதி 08.01.2023 அன்று செய்தார்கள். Revenue Stamp யார் வாங்கி வந்தது என்றால் எதிரி வாங்கி வந்தார். எத்தனை ஸ்டாம்ப் என்றால் 2 ஸ்டாம்ப். அந்த ஸ்டாம்பை யார் புரோநோட்டில் ஒட்டி கொண்டு வந்தது என்றால் எதிரி ஒட்டி கொண்டு வந்தார். எதிரி புரோநோட்டில் ஸ்டாம்ப்ஒட்டி கொடுக்கவில்லை என்றும் நாங்களாக தயார் செய்யப்பட்டவை தான் புரோநோட் என்றால் சரியல்ல.

7. புரோநோட்டில் கருணாகரன் எத்தனை கையொப்பம் செய்துள்ளார் என்றால் கையொப்பம் செய்யவில்லை. புரோநோட்டில் கோபாலகிருஷ்ணன் எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் ஒரு கையொப்பம் செய்தார். இராமகிருஷ்ணன் எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் ஒரு கையொப்பம் செய்தார். எதிரி புரோநோட்டில் எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் ஒரு கையொப்பம் செய்தார். சாட்சி கையொப்பம் செய்துள்ளவர்கள் யார் யார் புரோநோட்டில் கைரேகை, கையொப்பம் வைத்துள்ளார்கள் என்றால் கோபாலகிருஷ்ணன், ராமகிருஷ்ணன் வைத்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் எந்த

கைரேகை கோபலகிருஷ்ணன் உடையது என்றால் கையெழுத்து மட்டும் போட்டுள்ளார், கைரேகை இல்லை. புரோநோட்டில் உள்ள கைரேகை யாருடையது என்றால் எதிரியுடையது. இந்த கைரேகை எதிரியுடையது என்பதை நிரூபிப்பதற்கு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. புரோநோட்டில் உள்ள ரேகை நாங்களாகவே தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்ட ரேகை என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள எழுத்துக்கள் எல்லாம் ஒரு பேனாவினால் எழுதப்பட்டது என்றால் சரிதான். புரோநோட்டில் எல்லாவற்றையும் ஒரே நபர் எழுதினார் என்றால் சரிதான். புரோநோட்டை பூர்த்தி செய்தது, சாட்சி கையொப்பம் செய்தது, சாட்சியின் முகவரி எழுதியது எல்லாம் ஒரே நபர் செய்தார் என்றால் அது தவறு. எதிரி எனக்கு எந்தவிதமான புரோநோட் கொடுக்கவில்லை என்றும் எனக்கு வேண்டிய நபர்களை வைத்து நானாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

8. எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் 23.08.2024 அன்று கொடுத்தேன். அதன்பின்னிட்டு வேறு அறிவிப்பு ஏதும் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த பின்னர் ஒரு அறிவிப்பு கொடுத்தேன். எத்தனை அறிவிப்பு கொடுத்தேன் என்றால் 3 அறிவிப்பு கொடுத்தேன். 3 அறிவிப்பையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் 2 அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேன் என்றும் 3 வது அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் 2 அறிவிப்புகள் தான் கொடுத்தேன். எதிரி எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றால் 17.09.2024 அன்று கொடுத்தார். எங்கு வைத்து காசோலை கொடுத்தார் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தார். எனது வீட்டில் தான் காசோலை கொடுத்தார் என்பதற்கு எனது மனுவிலும், நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் நிருபண வாக்குமூலத்தில் எனது வீட்டில் தான் காசோலை கொடுத்தார் என்பதற்கு எனது மனுவிலும், நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் மனுவில் சொல்லவில்லை. எதிரி புரோநோட்டை வீட்டில் வைத்து தான் கொடுத்தார் என்று சொல்வதற்கு மனுவில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. காசோலை கொடுக்கும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் இராமகிருஷ்ணன் இருந்தார்.

9. காசோலை கொடுக்கும் போது எதிரியுடன் யாராவது இருந்தார்களா என்றால் அவரது அக்கா அல்லது தங்கயையாக இருக்கலாம் அவர் இருந்தார். பெயர் தெரியாது. காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால் நான் தான் பூர்த்தி செய்தேன். எவ்வளவு தொகைக்கு பூர்த்தி செய்தேன் என்றால் ரூ. 8,40,000/– க்கு பூர்த்தி செய்தேன். என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் கையெழுத்து யார் செய்தது என்றால் எதிரி செய்தார். எந்த தேதியில் காசோலையை பூர்த்தி செய்தேன் என்றால் 17.09.2024 அன்று பூர்த்தி

செய்தேன். காசோலையை வங்கியில் யார் வசூலுக்கு தாக்கல் செய்தது என்றால் நான் தான் தாக்கல் செய்தேன்.

10. வங்கி செலானை யார் பூர்த்தி செய்தது என்றால் நான்தான் பூர்த்தி செய்தேன். வங்கி செலானை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. எனக்கும், எதிரிக்கும் காசோலை கொடுத்தற்கு முன்பு வரவு, செலவு நடைபெறவில்லை என்றால் சரிதான். 2021, 2022 ம் ஆண்டு காலக்கட்டத்தில் பணப்பரிவர்த்தனை நடைபெற்றதா என்றால் இல்லை. 2021, 2022 ம் ஆண்டு காலக்கட்டத்தில் எனக்கும், எதிரிக்கும் G- Pay மூலமாக பணப்பரிவர்த்தனை நடைபெற்றதா என்று நிரூபிக்கப்பட்டால் எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலைசெய்யலாமா என்றால் முடியாது. ருணாகரன் சம்மந்தமாக பரிவர்த்தனை நடந்துள்ளது. கருணாகரன் என்பவரிடம் தான் எதிரி காசோலையை கொடுத்தார் என்றும் என்னிடம் எதிரி காசோலையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கருணாகரனிடம் எதிரி கொடுத்த காசோலையை நானாக ரூ. 8,40,000/- க்கு பூர்த்தி செய்து வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. மேற்படி 3 வங்கிகளின் பாஸ்புக் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. வங்கி பாஸ்புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் நீதிமன்றம் உத்தரவிட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.